"அகரமுதலவெழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றேயுலகு"

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது. Registered at the G.P.O.

# சுதேசநாட்டியம்.

## THE JAFFNA NATIVE OPINION.

"யதார்த்தவாதி | மாசமிருமுறை பகிரங்கஞ் செய்யப்படும் | வெகுஜன விரோதி"

மலர் 36 } யாழ்ப்பாணம் வயாவிளான், வெகுதானியஹு ஆவணிமீ எ-ந் உ (23-8-38) செவ்வாய்க்கிழமை { இதழ் 17

### தோத்திரம்

நல்ல ராற்றவு ஞானநன் குடையர்தம் மடைந்தவர்க்கருளிய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர் மலிகடன் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே தீச்சர மிராப்பகனினைந்தேத்தி
யல்ல லாசறுத் தரனடி யிணைதொழு மன்பரா மடியாரே.

(திருஞானசம்பந்தமூர்த்தி)

## வடமாகாணத்துள்ள
# சில இடப்பெயர்களின் வரலாறு.

திரு. ச. குமாரசுவாமிப்பிள்ளை

உரிமைபதிவு.

(முன்தொடர்ச்சி)

சாவகரென்பவர் யாவரெனச் சிறிதாராய்தல் தகும். அம்மக்கள் சாவகதேயச் சுதேசிகளென்பதற்குச் சந்தேகமேயில்லை. ஆயினும், சாவக தேயம் யவைதீவோ (ஜாவாவோ) சுமித்திராதீவோ (சுமாத்திராவோ) எனத் தேர்ந்துகொள்ளுதல் தெளிந்தோர்க்கும் அரிதுபோலும்.

காலஞ்சென்ற கலாபிமானி, யாழ்ப்பாணமீன்ற ஓரிய இரத்தினம், ஸ்ரீமான். வி. கனகசபைப்பிள்ளையவர்களியற்றிய "பதினெண்ணூற்றாண்டுக்கு முந்திய தமிழர்" எனப் பெயரிய சகப்பிரசித்தமான நூலினகத்தும் சாவகத்தைப்பற்றிய சந்தேகம் நீக்கப்படவேயில்லை.

தோலெமி என்னும் பண்டைப் புவனசாஸ்திரி சுமித்திரா துவீபத்தைப் பெரிய சாவகமென்றும், யவதுவீபத்தைச் சிறிய சாவகமென்றுங் குறியீடுசெய்தமையுங் கவனிக்கத்தக்கதே.

பண்டைத் தமிழ்நாட்டைச்சூழ்ந்த 'பதினேழ்புவியில்' சாவகமும் ஒன்றுயுள்ளதாம். சாவகமென்னும் பெயர் ஒலியளவிலே சாவா [ஜாவா] என்பதை ஒரு சிறிதொத்திருத்தலின், 'சாவா அகம்' என்பதன் மரூஉவெனச் சாதித்தல் கூடுமாயினும், தற்காலம் சாவா என்று சொல்லப்படும் சிறுதீவையே முற்காலத்தைய எம்முன்னோர் சாவகநாடென எடுத்துக்கூறினரென்பதும், ஏனைய மலாய்த்துவீபங்களை அவரறியாரென்பதும் ஆன்றோராலே அங்கீகரிக்கப்படா.

சாவகமென்பது 'சாவா' உள்ளிட்ட மலாய்த்துவீப கணத்தைக்குறித்த ஒரு பெயரெனின், அக்கருத்து அத்துவீபகணங்களின் வரலாற்றையறிந்தவர்க்கும் பண்டைத்தமிழ்மக்களின் பெருமையையுணர்ந்தவர்க்கும் பொருத்தமாய்த் தோன்றும்.

புராதனகாலத்தே இத்துவீபங்களெல்லாம் ஒன்றுசேர்ந்தவொரு பிரதேசமாக இருந்திருக்கவுங்கூடும். அப்பேருர்க்குச் சாவகமென்னும் பெயர் வழங்கப்பட்டிருத்தலுங் கூடும். அன்றி, அப்பெயர் 'சாவா' என்னுஞ் சிறுத்தீவுக்கே ஆதியில் வழங்கப்பட்டுப் பின்னர் அதற்குச் சமீபமாயுள்ள சுமித்திரா முதலிய ஏனைய தீவுகட்கும் உபசார வழக்கால் ஏற்பட்டிருத்தலுங் கூடும்.

சாவகம் பண்டைத் தமிழ்மக்கள் நன்கறிந்தவொரு தேசமென்பதற்கும் சாவகத்துக்கும் தமிழகத்துக்கும் வியாபாரசம்பந்தம் இருந்ததென்பதற்கும் பல சான்றுண்டு. அவையாவெனின்: மலாய்த்துவீப கணத்தைச்சேர்ந்த சில தீவுகளிலே திராவிடப்பெயர்களுடைய பலதானங்கள் காணப்படுவதும், மலாய்ப் பாஷையிலே அநேக தமிழ்ச் சொற்கள் வழங்கப்படுவதும், அவை சுமித்திரா தீவுகளிலே அழிந்த தமிழ்க்கோவில்களிருப்பதும், மணிமேகலையென்னும் பழந் தமிழ்க்காவியத்திலே சாவகதேயத் தலைநகராம் 'நாகபுரம்' [நாகர் திராவிடகணத்தைச்சேர்ந்தவரென்ப] என்னப்படுவதும், அக்காலத்தே அங்குள்ளார் தமிழ்வழங்கினரெனத் தோன்றுவதும், ஆகிய இவையே.

தமிழகத்தொடு வாணிகஞ்செய்த சாவகர் இரத்தின துவீபமென விளங்கிய ஈழதேயத்தையும் நன்கறிந்தவராய் ஆங்கும் பண்டைக்காலத்தே பண்டமாற்றஞ்செய்து வந்திருத்தல் சாத்[illegible]ம். அம்மக்களது குணகுணங்களைச் செவ்வனேயறிந்த தமிழ்வேந்தருஞ் சிங்களவேந்தரும் அவரைத் தமக்குப் படைவீரரா யழைத்துக்கொள்ளுதல் ஆச்சரியமாகாது.

விஜயவாகுவுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தையாண்ட தமிழரசராலே சாவகர் தென்மிராட்சியிலே குடியேற்றப்பட்டிருத்தலுங்கூடும். தற்காலத் தமிழ்வழக்கிலே யாவுகர் என்னப்படுவோர் இச்சாவுகரேயாம்.

அன்னியசாதியார் நம்நாட்டில் குடியிருந்தாரென்பதைச்செவிமடுக்கவியலாத அபிமானிகள் சாவகச்சேரி யென்பதற்குச் 'சமணர்சேரி' எனப் பொருள்சொல்லினுஞ் சொல்வர். [சாவகர்—சமணர்]

கச்சாய்.--இது தென்மிராட்சிக்குச்சேர்ந்த ஒரு சிற்றூர். இதற்கு இப்பெயரை இட்டு வழங்கியவர் சாவகராவர். சுமித்திரா தீவிலே கச்சா எனப் பெரியவோர் ஸ்தானமுண்டு. அதற்கு அப்பெயரையளித்தவர் ஆங்குக் குடியேறிய இந்தியராம். ஸ்ரீபோஜ. மலாயு, மகேசின், கலிங்க, வாலி, போயபுரம், மகவான். இலங்காபுரம், இலங்காவி முதலிய மலாய்த் துவீப கணத்தைச்சேர்ந்த இடப்பெயர்களும் இந்தியர் இட்டு வழங்கியனவேயாம்.

கச்சா என்னும்பெயர் வட இந்தியாவைச்சேர்ந்தவொரு தானத்துக்கு உரியதாகும். தென்னிந்தியாவிலுள்ள கச்சியென்னுந் தலத்தின் பெயர் சாவகமொழியிலே கச்சாவென விகாரப்பட்டதெனினும் அமையும்.

சாவாங்கோடு—இப்பெயருள்ளவிடம் சாவகச்சேரிக்குச் சமீபமாயுள்ளது. இக்காலத்தார் இதனைச் சாவாங்கோட்டையென்று சொல்வர். சாவான்கோடு சாவாங்கோடாயினது. சாவான்—சாவகனென்பதன் சிதைவு.

அம்ஸ்ரடாம் (Amsterdam) காரைதீவு. ரொற்றடாம் (Rotterdam) அனலைதீவு. லேடின் (Leyden) வேலணை. டெல்வ்ற் (Delft) நெடுந்தீவு ஹார்லெம் (Haarlem) நயினாதீவு. மிடல்வேக் (Midelburg) புங்குடுதீவு.

மேற்சொல்லிய இடப்பெயரெல்லாம் உலாந்தேசர் சுயதேசத்துள்ள தானங்கட் குரியவைகளேயாம். அவையல்லாது அவரளித்த மறுநாமங்களாவன.

கயிற்ஸ் (Kayts) ஊராத்துறை. ஹால்மன்ஹீல் (Halmenhiel) ஊராத்துறைக்கோட்டை. கலியென்ஜ் (Galienye) காக்கைதீவு. கலுவி (Galue) பாலைதீவு. துவிகெபிறிடெர்ஸ் (TweeGebroeders) இரணைதீவு.

உலாந்தேசவாசினர் உகந்தளித்த இந்நாமங்களனைத்தும் அவ்வரசொடு நிலையழிந்தன. ஆயினும் எம்மரசினர் டெல்வ்ற், கயிற்ஸ் என்னும் இரு பெயர்களையும் பரிபாலித்து வருகின்றனர். பறங்கிகளளித்த பாசை (துறை) என்னுஞ் சொல்லைத் தழுவிப் பாசையூர் என்னும் பெயர்படைத்த நம்மவர், உலாந்தேசப் பெயரொன்றையாயினும் ஏற்றுவழங்காதது என்னையோ?

(தொடரும்)

இவறலு மாண்[illegible]ந்த மானமு மாணு வவகையு மேத மிறைக்கு.



துதி வெண்பா

ஞானஞ் சுகநிதியம் நல்லாயுள் தாவயலைவ
ஆனைமுக வாகுமரா ஆறுமுகா-ஆனந்தப்
பேர்க்குமர னச்சியர்த்ரம் பீடுபெற்றுநிற்
சீர்த்தியுடன் வந்து செகம் [-கவெற்குச்

# சுதேச நாட்டியம்

யாழ்ப்பாணம், வயாவிளான்

வெகுதானிய ஞூ ஆவணிமீ எஉ

## மனிதரும் மது-மாமிசமும்

'மக்கள்யாக்கையிற் பிறத்தலுமரிது'

என்னும் ஆன்றோர் கூற்றின்படி கடவுளாற் படைக்கப்பட்ட சீவகோடிப் பிறப்புகளுள் மனிதனே மிகவும் விசேடமுடையவன். எனெனில், ஓரறிவு ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐயறிவுள்ள, பிறவிகளை விட, ஆறறிவு என்னும் பெரிய பகுத்தறிவையும் மனிசன் உடையவனா யிருப்பதாலென்க, இந்த உணர்ச்சி யிருப்பதினாலேயே மனிதரை மக்களென்றும், இது இல்லாத மற்றப்பிறப்புக்களை (மாக்கள்) விலங்கினங்களும் அவற்றிற் கீழ்ப்பட்ட பிறப்புக்களுமென்றும் சொல்லிக்கொள்ளுகிறோம். ஆகவே எல்லாச் சீவராசிகளிலும் மேலான பிறப்பையும், அறிவையும் உடைய மனிதர், விலங்கினங்களும் செய்யத் தகாத எளிய வேலைகளைச் செய்துகொண்டிருப்பது தாம் மேலான பிறவிகள் என்பதைக் காட்டும் பொருட்டா? அன்றி முன்வினையின் பொருட்டா?

தாழ்ந்த பிறப்புக்களான, பசு, குதிரை முதலியன தாமும் விரும்பாது அருவருத்துத் தள்ளிவிடுகின்ற உணவுகளை மேலான பிறவியும், நன்மை இது, தீமை இது என்னும் பகுத்தறிவு உடையவர்களுமான மனிதர் விரும்பி உண்பரேல், அவர்களை மனிதர்களென்பேமா? அன்றி, கரடி, புலி, சிங்கம், நரி முதலிய துஷ்ட வனவிலங்குகளென்பேமா? அன்றி இந்த விலங்கினங்களிலும் தாழ்ந்த விலங்குக ளென்பேமா? எதுவென்பேம்.

எங்கள் சைவசமயிகளுட் சிலர் தாம் சைவசமயானுட்டானங்களில் நிறைந்தவர்களென்றும் பெரிய சாதியிற் சிறந்தவர்களென்றும் சொல்லிக்கொண்டும், மற்றையோர் பார்க்க நடித்துக்கொண்டும், பஞ்சமகா பாதகங்களுட் டலையெனக் கருதப்பட்டனவும், சைவவேதாகமங்களுள் விலக்கப்பட்டனவுமான மதுக்குடியையும், மாமிசவுணவையுமே பெரும்பாலுங் கையாண்டு வருகின்றனர்.

இவர்கள்செயல் இப்படியேனில், இவர்களால் குறைந்தவர்களென மதிக்கப்படுபவரும், இவர்களின் அடிமைகுடிமைகளென்றிருப்போரும் எப்படியிருப்பார்களென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? சிலபோது, இந்தச் சாதிமான்கள் எம்மிலும் மிகக் குறைந்தவரென எண்ணிக்கொண்டிருக்கும் அடிமை குடிமைகள் இவர்களிலும் பெரிய ஆசாரசீலர்களா யிருப்பதை யாவருமறிவார்களே; அப்படியானால் இவர்கள் அவர்களிலிருந்து கூடியது எதிலென்பார்கள்; குடியிலும் கொலைத்தொழிலான மாமிசபோசனத்திலுமா?

முற்காலத்திலே மதுமாமிசம் புசித்தவர்களை அறியும்போது அவர்களைப் பரிசுத்தமுள்ள சைவாலயங்களுட் பிரவேசிக்கவிடாது, மதிற்புறத்தில் நின்று தரிசிக்கச்செய்துவிடும் வழக்கம் சில இடங்களிலிருந்ததாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இக்காலத்தில் வெளியில் நில்லென்று சொல்வாருமில்லை; வெளியில் நிற்பாருமில்லை; அப்படியல்லவென்று கோவிலதிகாரி அல்லது கோவிலிலுள்ள ஐயர் கூறிவிட்டால் வில்லங்கம்வந்து முடிந்தேவிடும். முடிவு கலகமும் வழக்குந்தான்.

பஞ்சமகா பாதகங்களுள் அடங்கியனவான இந்தக் குடியையும், கொலையையும் சைவ சமயம் மாத்திரமல்ல, மற்றெல்லாச் சமயமும் வெறுத்துப் போதனை முறையிலும் சாதனை முறையிலும் வைத்திருப்பதை நாம் காண்கிறோம். சில சமயிகள் தாம் இவற்றைப் புசிப்பதற்காக, அது எங்கள் சமயத்தில் அப்படி யிருக்கிறது; இப்படியிருக்கிறதென்று சொல்லிக்கொள்ளக்கூடும். ஆனால் உண்மையாக அவை தவறுடையனவென அறிந்தும் சரியெனச் சொல்லிக் கொள்வது அவர்கள் மனச் சாட்சிக்கு வருத்தமாகவே தோன்றும்.

எல்லாச் சமயமும் வெறுத்துத் தள்ளுகின்ற இத் தீயசெயல்களைச் செய்து தம் பொருளை யிழப்பதுமன்றிப் பெரிய நரகவேதனைக்கு மாளாகிக்கொண்டு வரும், பொல்லாத அறிவில்லாத மனுஷர் பலர் பலதேசங்களிலுமிருந்து வருவதையும், இவற்றால் இவர்கள் அடைந்த அடைகின்ற நிலையையும் நாம் கண்டும் கேட்டுமிருக்கின்றோம்.

சிலர் தம்மைச் சிவசமயிகளென மதித்துச் சிவசின்னங்களாகிய விபூதி உருத்திராக்கம் முதலியவற்றைத் தரித்துக்கொண்டு மதுமாமிச பட்சணிகளாயிருந்து வருகிறார்கள். இது எவ்வளவு பாவத்துக்கும், வசைக்கும் உரிய செய்கையென்பதை யுணரக்கடவர்.

தற்காலத்திற் குடியாதவர்க்கும் கடியாதவர்க்கும் சண்டை பிடியாதவர்க்கும் மரியாதியில்லையென்றும், இவையே மரியாதி, பத்தி-சித்தி- முத்தியளிக்கும் பெறுபேறுகளென்றும் கருதுகிறார்கள். இவர்கள் புத்தியிருக்கும்வாறென்னை! ஆதலால், படைத்தவனே இவர்களைப் பக்குவப்படுத்திப் புத்தியையூட்டுவோராக.

"கொல்லாவிரதங் குவலயமெல்லாமோங்க—எல்லார்க்குஞ் சொல்லுவதென்னிச்சை பராபரமே" என்றும்,

"கள்ளினும்உளதுகோல் கருத்தழிப்பதே"

என்றும்வரும் ஆன்றோர்வாக்குகள் கவனிக்கத்தக்கன.

### காலநிலை

மழையில்லை. மந்தாரமும் வெயிலினுக்காமும் இருக்கிறது. கூகைக்கட்டு இன்னும் இலைப்பிடிக்கின்றது.

### ஆசிரியர்கள் தராதலப் பரீட்சை

தராதலப் பட்டம்பெற்ற ஆசிரியர்களிடையே ஏற்பட்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதன்பொருட்டு இவ்வருடம் தொடங்கி சிலகாலம் இப்பரீட்சையை நிறுத்திவைக்க கல்விப்பகுதியார் உத்தேசித்திருக்கின்றனர். இப்பரீட்சையிற்தேறி வேலையற்றிருப்பவர்களின் தொகை 2000 பேர்கள் எனத் தெரியவருகிறது.

### சுப்பிறீங்கோடு

யாழ்ப்பாணத்திலே நடைபெற்றுவந்த சுப்பிறீங்கோடு 9-ந் திகதி செவ்வாய்க்கிழமையுடன் முடிவானது. கடைசியாகக் கரவெட்டியைச் சேர்ந்தவனான சின்னையா கந்தவனமென்பவன் தன் மாமனை நாகமுத்து-கந்தையா என்பவனைச் சென்ற சித்திரைமாசம் 22-ந்திகதி கத்தியாற்குத்திக் கொலைசெய்ய எத்தனித்தவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு முடிவில் எதிரி கைபிழைபாட்டுக் கொலை செய்ய எத்தனித்ததிற் குற்றவாளியாகி நாலுவருடக் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனன். மட்டக்களப்புச் சுப்பிறீங்கோடு இம்மாசம் 15-ந்திகதி திங்கட்கிழமை ஆரம்பமானது.

### கடிதம்

## கல்வியால் மதமாற்றம்

பல்லாண்டுகளின்முன் அமரிக்கன் பாதிரிமார் யாழ்ப்பாணம் வந்து நாகரீகத்திற் குறைந்த ஏழை நிலைகொண்ட எங்கள் மதமக்களுட் பலர்க்கு அன்னவஸ்திரம் அளித்துத் தம் மதநூலைப்புகட்டியும், வட்டுக்கோட்டையிற் ருபித்த தம் செமினேரியில் வேதனஞ் சிறிதுமின்றிச் சமஸ்த செலவையுங் கொடுத்துக் கற்பித்தும், பின் தம் மதவலையுட்பட்டவருக்கு ஏற்ற உதவிகள் புரிந்தும், அவர் பெற்றோரால் வழங்கியுள்ள, சிதம்பரப்பிள்ளை, தாமோதரப்பிள்ளை, முருகேசு விசுவநாதபிள்ளை, கதிரைவேற்பிள்ளை, அப்புக்குட்டி, கனகரத்தினம் என்னும் நாமங்களை முன் அமெரிக்காவிலிருந்து தர்மப்பணம் அனுப்புவார் நாமமான ஜெவின்ஸ், கின்ஸ்பரி, உவின்சிலோ, ஹாரல், உவைமன், பார், மெக்கி, என்பதாதி நாமங்களாய் வழங்கியும் வந்தனர் இவர்போல்வாருட் பலர், குழந்தைகட்கு இனிப்புக்காட்டி ஏய்ப்பார்போல் தாங்கள் பெறும் சம்பளத்துக்காய் தம்மை ஏய்த்துத் தாம் நிற்கும் நிலைக்கிழுத்தவர்கள் நாணும்படி, அவர் பார்க்கவே மறுபடியும் தம் முன்மதத்தை மிகவுஞ் சிரத்தையுடன் அனுசரிப்பாராயினர். "என்னை ஏய்த்தாய் நீ; உன்னை ஏய்த்தேன் நான்" என்றபடி.

போக! இடையிடான சிலகாலம் வெட்கந் தலையேறியோ, தமக்கு நல்ல சம்பளம் கொடுத்துத் தம்மை ஏவுவார் இன்மையாலோ இந்த ஆட்பிடிகாரர் மவுனத்தில் கிடந்து தற்போது மறைவிலிருந்து கொண்டு அறிவிற் குறைந்த கற்கும் சில வாலிபர்க்குக் கண்ணுக்கோ, நாவுக்கோ, செவிக்கோ இன்பம் பயக்கும் காட்சியையளித்துப், பிரசாரணம் பண்ணியும் தம்மதத்திற்கு இழுக்கத் தொடங்கிவிட்டனர் என அறிந்து விசனிக்கின்றேம்.

எந்த மார்க்கத்தையும் இழித்துக் குறையேற்றுவது எமது விருப்பன்று. நம் தேசத்தில் வழங்கும், சைவ, கிறீஸ்த, ஸ்லாமிய, புத்த மார்க்க நூல்களை இனிது கற்றறிந்து கிறீஸ்து மார்க்க மொன்றே உத்தமமானது என்றும் மற்றையவை யுத்தி புத்தி அனுபவத்திற் கிணங்காத இழுக்குடையனவென்றும் நம் வாலிபர் சிந்தித்து அம்மதத்[illegible]பின்பற்றத் தொடங்கினரா? [illegible] கண், நா, செவி வரக்குக் காட்சியில் எத்தண்டு பின்பற்றத் தொடங்கினரா? என்ற வினுக்களுக்கு இவர் விடையெனக் கொடுக்கக் கிடப்பதென்னையோ?

### ஓ வாலிபனே!

உன்னை ஏய்க்கும் வன்மையுள்ள ஒருவனை நீ ஏய்க்கும் வன்மை உனக்கில்லையாகில் உன்மதியென்னை? உனக்கு மூத்தோர் உன்னில் பன்மடங்கு கற்றவரன்றோ? உனக்கு மார்க்க விஷயத்தில் சஞ்சாரகராய் இருப்பவர் பெற்றோர் சகோதரர் என்னிலை யிருக்கின்றனரென்பதைச் சிந்தித்தாயா? உத்தியோகத்தை, பெண்ணை, நம்பி கிறீஸ்து மார்க்கத்திற் பிரவேசித்த எத்தனைபேர் பின் அதோகதியடைந்து நகையாடப் பட்டாரென்பதை உனக்கு ஒருவருஞ் சொல்லவில்லையா?

"பதிதன்" என்றுள்ளவனுக்கே மேலுள்ள வினுக்கள் உரியவை.

உத்தம வழியைக்கண்டு நித்தியானந்த முத்தியைப் பெறவிருக்கும் நீ, உனது பெற்றோர் எவ்விடர் வருவிப்பினும் அஞ்சாது நின்று அவர்களுக்கும் உன் உத்தம வழியைப் போதித்து அவர்களையும் உன்வழியிலிழுப்பதன்றோ உசிதம். அவர்கள் பொய்மதத்தைப் பூசித்து எரிவாய் நரகிலழுந்த நீ முத்தியிலிருந்து மகிழவா விரும்பினை!

இருக்க, பிள்ளைகளின் நன்மையைக் கருதியுள்ள நல்லாசிரியர் நற் பிரசாரகர்கள் பக்குவமில்லாத ஒரு மாணுக்கன் தன் பெற்றோரை மீறி அவர்களோடு பெரும் பிளவையுண்டாக்கக் கூடிய ஒரு விஷயத்தில் தலையிடுவதைக் காணும்போது அவனுக்கு நற்புத்தி சொல்லுவதும், அவனின் பெற்றோருக்கு அவன் நோக்கத்தை அறிவித்து விடுவதுமே முறைமையென்பர். ஆயின் தற்கால ஆசிரியர் பிரசாரகர்களோ இவ்வழியைத்தணந்து கிழட்டு ஆடாயினும் உருப்படி ஒன்று கூடினுல் போதுமென்று மகிழ்பவராய் காணப்படுவது உண்மையாய் எம்மை பெரும் விசனத்துள் ஆக்குகின்றதென்பதை நம் நண்பரான அவர்க்கு நாம் அறிவிக்கின்றேம்.

சைவாபிமானிகளே! உங்கள் பிள்ளைகளை மார்க்க ஆட்பிடிகாரரென்றுள்ள போதகர், ஆசிரியர், கண்வலைக்குட் சிக்கிக் கெடவிடாதீர்.

க. வேலுப்பிள்ளை
வயாவிளான்

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் பழி நாணுவர்·

கதைப்பகுதி

## சுந்தரன் செய்த தந்திரம்

### சுந்தரனின் தந்திரப்பிழைப்பு

தொல்புரத்தில் சுந்தர பண்டாரம் என்று ஒருவன் இருந்தான். அவன் தந்திரசாலியாதலால் அவன் பிழைப்புத் தந்திரமாகவேயிருந்தது. ஊரூராய்த்திரிந்து அவரவர் நடபடிகளை விசாரித்தறிந்து உனக்கு அதுவருகுது இதுவருகுது என்றும், வசியக் குளிகைகள் என்று போலிக் குளிகைகளைக் கொடுத்தும்; திரிகொளுத்தி வாயில்வைத்துத் திஷ்டிகழித்தும், வானம்பாடிப்புல்லை உமிழ்நீரில்நனைத்து முழுகும்படி செய்து உன் பகைவர் இதுபோலவே உன்னைச் சரணடைவர் எனக்கூறியும், விபூதியைக் குளிகையாக்கிக் கையிடுக்குக்குள் வைத்து மண்ணைக்கிள்ளி விபூதியாய்மாற்றிக் கொடுத்தும் சனங்களை மயக்கிச் சாமிவேஷம் போட்டுப் பொருள் பறித்துவந்தான். இவன் ஒருநாள் நல்லூரில் ஓர் வளவில் வந்து விடுதிவிட்டுக்கொண்டு பக்கத்துள்ளாரின் சுகசேமங்களை விசாரித்துக்கொண்டிருந்தான். அவ்விட்டிலுள்ள வேலையற்ற ஓர் கிழவி ஊளப்பெல்லாம்பேச விருப்பியவளாதலால் பண்டாரம் தனக்குக் கிடைத்த வசதியை இழந்துவிடாமல் பெத்தாச்சி அவர்செய்தியென்ன இவர் செய்தியென்னவென்று விசாரித்துக்கொண்டுவந்தான். அத்தருணம் அவனுக்கோர் சங்கதியெட்டிற்று. அதாவது;—

ஓர் அரசாட்சி உத்தியோகஸ்தனுன சோமநாதபிள்ளைக்குத் திரளான ஆஸ்திபிருந்தும் புத்திரசந்தானமில்லாமல் மெத்த வருந்துகிறுரென்றும், அனேக திரவியஞ் செலவிட்டும் தானதருமங்கள்செய்தும், வைத்தியம் செய்வித்தும் திருப்பதி யாத்திரைகள் செய்தும் பலன்பெறவில்லையென்றும், அதனுல் அவரும் பாரியும் மிகு துக்கமுடையவர்களாயிருக்கிறுர்களென்றும், தற்போதும் முனியப்பசாமிக்கும் ஒருதொகைப் பணமுடிச்சு நேர்ந்துகட்டிவைத்திருக்கிறுர்களென்றுஞ் சொன்னுள். அதைக்கேட்டும் அவன் பறுவாய் பண்ணுதவன்போல வேறு கேள்விகளில பொழுதுபோக்கிவிட்டு அசனமுண்டு அங்கேதுயின்று அன்றிரவைக்ககழித்தான். மறுநாள் சூரியோதயமானவுடனெழுந்து சோமநாதபிள்ளைவிட்டை விசாரித்தறிந்துகொண்டு மிகுதிச் சங்கதிகளையும் விசாரித்ததினுல் அவர் வெளியே செல்லும் நேரத்தையும் அறிந்துகொண்டான்.

### சோமநாதபிள்ளை மனைவியை ஏய்த்தல்

பின்னர் அவர் வெளியேபோன சமயம்பார்த்துக் காவிவஸ்திரந்தரித்துக் கையிற் கமண்டலமேந்தித் தேகாதியந்தம் விபூதியணிந்து சந்தனத் திலதமிட்டு அதன்மத்தியிற் குங்குமப்பொட்டிட்டு முண்மிதியடியேறி ஓர் புலித்தோலையுஞ் சுருட்டிக் கக்கத்துள் வைத்துக்கொண்டு சோமநாதபிள்ளை மனைவியின் முன்வந்து தோன்றினுன். அவனைக் கண்டமாத்திரத்தில் அவளும் எழுந்துநின்று ஆசாரஞ்செய்து வணங்கினுள். சாமியாரோ "கும்பிடப்போனதெய்வம் குறுக்கிட்டாற்போல" மனது சந்தோஷித்து, அடி அம்மா உங்களுக்கு ஒரு குறையிருக்கிறது. அதற்காக அல்லும் பகலும் ஈஸ்வரனைத் தியானிக்கிறீர்கள். நீங்கள் கோரியகாரியம் நிறைவேறப்போகிறது. அவ்விசேஷ மங்கலசெய்தி கூறவந்தேன். பயப்படாதேயென்று சொல்லவும்; அவள் தீர்க்கதெண்டனுய் விழுந்து நமஸ்கரித்துச் சுவாமி அதேதென்று திருவாய்மலர்ந்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தாள். சோமநாதபிள்ளையின் மனைவி சுந்தரன்பாதத்திற் றெண்டனுய்விழுந்து பிரார்த்தித்தவுடனே அவன் சொல்லுகிறுன்; அடியம்மா, நீ புத்திரபாக்கியமின்றி மெத்த வருந்துகிறுய். நீயும் உன் புருஷனும் அல்லும் பகலும் அதேகவலையாயிருந்து ஈஸ்வரதியானஞ்செய்து வருவதுடன் திருப்பதி யாத்திரைகளுஞ்செய்து தானதருமங்களும் புரிந்துவருகிறீர்கள். இதனுல் ஈஸ்வரன் இரங்கி உனக்கோர் புத்திரபாக்கியமருளச் சித்தமுற்று என்னையிங்கனுப்பினுர். ஆதலால் நீ கடவுள்மேல் என்றும் நேசமாயிருந்து முன்போலத் தானதருமங்களைக் குறையின்றிச் செய்துவா! நீ முனியப்பசாமிக்கு நேர்ந்துவைத்த பணமுடிச்சை இங்கேகொண்டுவா, நான் அதை அவருக்கு ஒப்புக்கொடுத்து விடுகிறேன் என்றுன். இதைக்கேட்ட மங்கையோ பிரமித்து ஈஸ்வரன்றுன் மாறுவேடம்பூண்டுவந்தார் போலுமென்று மனதுட் சிந்தித்து ஈஸ்வரனல்லாவிடின் மற்றையோர்க்குப் பணமுடிச்சிருப்பதும் நான் புத்திரபாக்கியமின்றி வருந்துவதும் நேர்ச்சிசெய்வதும் எப்படித் தெரியுமென்றுன்னி மேன்மேலுந் தோத்திரஞ்செய்து வீட்டுட்புகுந்து நேர்ச்சிசெய்த பணமுடிச்சைக்கொண்டுவந்து பாதத்தில்வைத்து நமஸ்கரித்தாள். அவனே அவளை ஆசீர்வதித்து ஓடி பின்னுக்கு வைத்துத் திருப்புகையில் "காற்றுள்ள போதேதூற்று" என்ற வாக்கியத்தைச் சிந்தித்துத் திரும்பிநின்று அடியம்மா! நீ தானதருமஞ்செய்வதிலும் உன்னை ஒறுப்பதே பேலானது. உனது ஆடைஆபரணங்களையிந்து நன்மனங்காட்டுவதே சுவாமிக்கு அதியுவப்பாயிருக்குமென்றுன். அவளோ தானணிந்திருந்த பொன்மணிமாலையை அவிழ்த்துக் கொடுத்துத் தன்னுடுப்புகளில் விசேஷமான பட்டுச் சருகைச்சேலையையுங் கொண்டுவந்து பாதத்தில் வைத்தாள். அதைக்கண்ட சுந்தரனே மனப்பூரித்து "அகப்பட்டதைப் பொத்திக்கொள்ளடா ஆண்டியப்பா" என்றுற்போலப் பின்னுஞ்சொல்லுகிறுன். உன்போல் அகதிகள் தாகந்தணிக்க ஓர் வெண்கலப்பாத்திரங் கொடு என்றுன். உடனே அவளோடிப்போய் ஜலபானஞ்செய்யும் வெண்கலக்கெண்டியைக்கொண்டுவந்து பாதத்தில் வைக்கவே, "பேராசைதரித்திர"மாய் முடியவுங்கூடும். இனி நிற்பது மோசமென்றெண்ணி மறுபடியும் ஆசீர்வாதஞ்சொல்லித்திரும்பி விரைவாய் நடந்துசென்றுன். செல்லுகையில் "குற்றமுள்ளநெஞ்சு குறுகுறுவெனும்" என்பதுபோல மனம்பதறி ஓர் பற்றையருகிற் போய்ப் போலிவேஷம்மாறிக் கூலிவேஷம்பூண்டு பொருட்களைப் பொட்டணமாய்க்கட்டிச் சிற்றடிப்பாடு கள்வழியாய் மறைந்து ஓடிச்சென்றுன்.

(தொடரும்)

## பெரியபுராணப் பெரியோர்

ஏழாலை, திரு. சே. சின்னத்துரை

### சுந்தர மூர்த்தி நாயனுர் சரித்திரம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநாகை காரோணம் சென்று பொன், மணி, ஆடை, குதிரை, சுரிகை முதலானவற்றைச் சிவபெருமானிடம் பெற்று மீண்டும் திருவாரூருக்கு வந்தார். அச்சமயத்தில் இப்பெருந்தகையாரின் பெருமைகளை சிவபெருமானிடம் அறிந்த சேரநாட்டரசராகும் சேரமான் பெருமான் நாயனுர் அவரைக் காணும்பொருட்டாக அங்கு சென்றுர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சேரமான் பெருமானைக்கண்டவுடனே அதிக அன்புடன் வரவேற்க, சேரமான் வன்றெண்டரின் பாதங்களில் விழுந்து வணங்கினுர். வன்றெண்டரும் அரசர் பெருமானை வணங்கினுர், இருவரும் தியாகராசப் பெருமானை வணங்கி பரவையார் மாளிகைக்குப்போனுர்கள். அச்சமயத்தில் பரவையார் இருவரையும் அதிக சிறப்புடன் வரவேற்று இருவரையும் திருவமுது செய்வித்தார். இவ்விரண்டு பெருமக்களும் ஒருவரை யொருவர் பிரியாத காதலினுல் உடல்கள் இரண்டாகவும் உயிர் ஒன்றுகவும் அதிக நண்புடன் பரவையார் மாளிகையில் இருந்தார்கள். வன்தொண்டர் பாண்டி நாட்டிலுள்ள சிவஸ்தலங்களாகிய மதுரை முதலான ஆலயங்களை வணங்கக் கருதி அங்கு செல்ல நினைந்து சேரர் பெருமானும் அங்கு போகக் கருதி இருவருமாக திருநாகைக் காரோணம் கீழ்வேளூர், வேதாரணியம் முதலியஇடங்களை தரிசித்தபின் மதுரையை வந்துஅடைந்தார்கள். திருவாலவாயிலில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளை வணங்கியபின் பாண்டிய அரசன் இருபெருமக்களைத் நமது இல்லத்துக்கு அழைத்துக்கொண்டு சென்று வேண்டிய பொருட்களைக் கொடுத்தார். சேரர் சோழர் பாண்டியர் ஆகிய மூவேந்தர்களுடன் வன்தொண்டர் திருப்பரங் குன்றத்தை வணங்கினுர். பின் குற்றுலம் திருநெல்வேலி முதலிய சிவஸ்தலங்களை வணங்கியபின் இராமேச்சுரத்திலும் மாதோட்டத்திலும் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்மேல் தேவாரம் பாடித் திருச்சுழியலில் தங்கினுர். ஒருநாள் இராக்காலத்தில் கனவில் சிவபெருமான் காளைப்பருவ முடையராய்க் கையினிற் செண்டும் திருமுடியில் கிரீடமும் தோன்றக் காட்சிகொடுத்தார். திருக்கானப்பேரூர், திருப்புனவாயில் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிப் பின் திருவாரூருக்குச் சென்று பரவையாருடைய மாளிகைக்குள் புகுந்தார்கள். இருபெருமக்களும் அங்கு திருவமுது செய்தார்கள். சேரர் பெருமான் வன்தொண்டரை மலைநாட்டுக்கு எழுந்தருளி வரும்படியாகக் கேட்டார். அதற்கு வன்தொண்டர் உடன்பட்டுச் செல்லும் வழியில் திருவையாறு தோன்றக்கண்டு அதைக் கும்பிடுவதற்கு மனம்கொண்டார். ஆனுல் காவேரியாறு பெருக்கெடுத்துப் பொங்கி யெழும்புவதைக்கண்டு அதைக் கடந்து செல்லமுடியாமல் துக்கித்து "பரவும் பரிசு" என்ற சொற்களை முதலாக உடைய தேவாரப் பதிகத்தைப் பாடினுர். அச்சமயத்தில் உலகத்திலுள்ள சராசரங்களெல்லாம் கேட்கும்படியாக எல்லாம் வல்ல இறைவன் "ஓலம்" என்று சத்தம் இட்டார். அப்பொழுது ஆறு பெருக்குத் தணிந்து ஆற்றில் நடுப்பக்கமாக ஒரு மணல் பரப்பு இருக்கக்கண்டார்கள். உடனே வன்தொண்டர் திருவருளின் பெருமையை வியந்து மணற்பரப்பால் கடந்து சென்று திருவையாற்றில் சிவபெருமானைக் கும்பிட்டு மீண்டும் அவ்வழியாக வந்து கரையைச் சேர்ந்தவுடன் ஆறு முன்னரைப்போல் பெருக்கெடுத் தோடியது. அதைக் கண்டவர்கள் அதிசயம் கொண்டார்கள். சேரர்பிரானும் வன்தொண்டரும் மலைநாட்டுக்கு எழுந்தருளிச் சென்றுர்கள். நகர எல்லைக்குள் சென்றவுடன் அதிக சிறப்புடன் இருவரையும் வரவேற்றுர்கள். பின் சேரருடைய திருமாளிகைக்குச் சென்று அங்கு திருவமுது செய்தார். சிலகாலம் இரு அன்பர்களும் ஒருவரை ஒருவர் பிரிய முடியாத அன்புடன் இருக்கும் நாட்களில் சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருவாரூருக்குச் செல்லவேண்டுமென்று கூறினுர். அப்பொழுது சேரர் தமது பண்டாரத்திலுள்ள பொக்கிஷங்களில் சிலவற்றை அள்ளிச் சில சுமை ஆட்களிடம் கொடுத்துவிட வன்தொண்டர் சென்றுர். திருமுருகன் பூண்டிக்குச் செல்லும் சமயத்தில் உள்ளம் கவர்கள்வனுகிய சிவபெருமான் சுமை ஆட்கள் கொண்டு செல்லும் பொக்கிஷங்களைப் பறிக்கும்படியாக வேடுவராய் உருவெடுத்த சிவகணங்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் அப்படியே சுமை ஆட்களிடம் பறித்தார்கள். வன்தொண்டர் மனம் வருந்திச் சிவபெருமானை வணங்கிக் "கொடுகு வெஞ்சிலை வேடுவர்" என்ற சொற்கள் முதலாகவுடைய தேவாரப் பதிகத்தைப் பாடினுர். அத்தருணம் பறிக்கப்பட்ட பொருள் எல்லாம் திருமுருகன் பூண்டிச் சிவாலய மொன்றிலில் குவிக்கப்பட்டது. வன்தொண்டர் அவற்றைச் சுமை ஆட்களிடம் சுமத்திவிட்டுத் திருவாரூருக்குச் சென்றுர். சேரர்பிரான் மீண்டும் மலைநாட்டுக்குப் போய் அங்கு அரசுசெய்திருந்தார்.

## ஆங்கில வித்தியாசாலைகள்

புதிதாக அமைக்கப்படும் ஆங்கில வித்தியாசாலைகட்கும், இருபாஷா வித்தியாசாலைகட்கும் அரசினர் இனி உதவி நன்கொடைப்பணம் அளிக்காரென கல்விமந்திரியின் நிர்வாகசபையினர் தீர்மானஞ்செய்திருக்கின்றனர். இவ்விஷயம் அமுலுனால் அங்கீகரிக்கப்படின் எவ்வளவோ செலவுசுருக்கமாகுமென வித்தியாகர்த்தர் அபிப்பிராயப்படுகின்றுர்.

## தலைமைக்காரர்களுக்குப் பயிற்சி

குற்றங்கள் நடக்கும் சமயத்தில் கிராமத் தலைமைக்காரர்கள் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்பதை அறிந்துகொள்ளும்பொருட்டு யாழ்ப்பாணம் பொலீஸ் உதவி சுப்பிரின்டென்டன்ற் இரண்டு நாட்களாக போனவாரம் பயிற்சிஅளித்தாரென அறிகின்றேம்.

## நம் தேசாதிபதி

தேகாரோக்கியத்தைப் பெறும்பொருட்டு ஓர் குறுகியகால விடுமுறையில் இங்கிலாந்துக்குச் சென்றிருக்கும் நம் தேசாதிபதி அவர்கள் ஐப்பசி மாதம் 30-ந் திகதி இலங்கைக்குத் திரும்புவாரென எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் திரும்பி வரும்வரைக்கும் திரு. G. S. ஷுட்மல் அவர்கள் தேசாதிபதியின் கடமையை நடாத்தி வருகின்றனர்.

## ஐக்கியநாணய சங்கங்கள்

இலங்கையில் மொத்தம் 1200 ஐக்கியநாணய சங்கங்கள் இருக்கின்றன. அவைகளில் யாழ்ப்பாணத்தில்மட்டும் உள்ளவை 320 சங்கங்கள். அதாவது 1000 பேருக்கு ஒரு சங்கவீதம் இருக்கின்றது. இவ்வருடம் யாழ்ப்பாண ஐக்கிய சங்கங்களில் மயிலிட்டிச் சங்கமே முதற்தரமானதென்று வெற்றிச் சின்னம் வழங்கப்பட்டது.

# தீண்டாமையும் ஆலயப்பிரவேசமும்

மீசாலை, வீ நடராஜன்

(முன்தொடர்ச்சி)

தேவ சாந்நித்தியமில்லாது போய்விடும் எனக் காமிகாகமங் கூறுகின்றது. ஆகையினால் தீண்டாதாரை ஆலயங்களுட் பிரவேசிக்க விடுவதிலும் பார்க்க ருஷியா முதலிய நாகரீக முதிர்ந்த நாடுகளிற்போல ஆலயங்களையே இடித் தழித்துவிடுதல் பலவகையிலும் பயனுடைத்தாயிருக்குமென்பதிற் றடையில்லை. என்னை? தேவசாந்நித்தியமற்ற வெறுமிடங்களிற் சென்று தரிசித்தலால் காலமும் பொருளும் வீண் விரையமாய்ப் போவதேயன்றிக் கண்ட பிரயோசன மொன்றுமில்லாது போனமையால் என்க. இவ்வாறு பின்னிகழவிருப்பனவாய நிகழ்ச்சிகளை அனுமானப் பிரமாணங்கொண்டுன்றி நோக்கும்பொழுது முன்னர்க்காலத்தில் நம் சமயத்தையும் சமயாசாரங்களையும் நிலைநிறுத்தும்படி கடவுளருளாலவதரித்த சமயகுரவர் முதலிய அவதார புருடர்களைப்போல ஸ்ரீ காந்தி, நேரு, ராஜகோபாலாச்சாரி முதலியோர் நம் மெய்ச் சமயத்தையும் சமயாசாரங்களையும் நிர்மூலமாக்கி உலகத்தைக் கெடுக்கும்படி கலிபுருஷனருளாலவதரித்த அவதார புருஷர்களெனவே கொள்ளுதல் வேண்டும். நான் கூறும் இக்கூற்று உங்களுக்கு நகைப்புக்கும் பரிகாசத்துக்கும் இடமாயேயிருக்கும் வீட்மோசாரியாற் கூறப்பட்ட எதிர்கால சம்பவக் கேள்விகளைச் சிறிதும் பொருட்படுத்தாதவமதித்த துரியோதனனாதியர் கொள்கைபோல ஆயின் நான் கூறுவது முற்றும் உண்மையின்பாற் படுமென்பது நீங்கள் அநுமான நெறிநின்று ஊன்றி வருங் காலத்தைப்பற்றி யோசிப்பீர்களேயானால் உங்களுக்குப் புலப்படாமற் போகாது. இச்சந்தர்ப்பத்தில் "காய்தலுவத்தலகற்றியொரு பொருட்கண், ஆய்தலறிவுடையார் கண்ணதே" என்னும் ஆன்றோர் வாக்கைக் கடைப்பிடித்தல் வேண்டும். இங்ஙனமெல்லாம் காட்டியவற்றால் சுயராச்சியமொன்றையே குறிக்கோளாகக் கொண்ட ஸ்ரீ காந்தி முதலியோரின் அனுப்புரைகளில் மயங்கி வருணாச்சிரம தருமங்களை யழித்துச் சண்டாளாதியோரை ஆலயங்களுட் பிரவேசிக்க விடுவதிலும் பார்க்க ஆகமவிதிப்படி பிரதிட்டை செய்யப் பெற்று அவ்வாகமங்களின் வழி பூசை செய்யப்பட்டு வரும் பூர்வீக ஆலயங்களை மூடி விடுதலே மிக விசேடமாமென்பது தெள்ளிதிற் புலனாதல் காண்க.

தற்காலத்துச் சாதியாசாரங்கள் சுயராட்சியத்துக்கு முட்டுக்கட்டையாயிருக்கின்றன எனக் கூறும் சுயராட்சியப் பித்தர்கள் இன்னுஞ் சிறிது காலஞ்செல்லச் சமயாசாரங்களும் சுயராட்சியத்துக்கு முட்டுக்கட்டையாயிருக்கிறதென அவற்றையு மழிக்கவே துணிவார்களென்பதற்குத் தடையென்ன? சமயாசார வேறுபாடன்றோ இந்துக்களையும் மகமதியர்களையும் ஒருவருடனொருவர் பகைத்துக் கலகம் விளைக்குமாறு தூண்டுகின்றது. இந்துக்கள் திருநீறு பூசுவதையும் விட்டு மாட்டிறைச்சியுந் தின்னப் பழகிக்கொண்டார்களேயானால் இந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் பேதமில்லாமல் போய்விடும். சுயராச்சியமென்ற முத்தியும் இலேசிற் கைகூடுவதாகும். சாதியாசாரஞ் சமயாசாரமெல்லாவற்றையுங் கைவிட்டதன்மேல் திருநீற்றைமாத்திரம் கட்டியழுவதனால் வரும் பிரயோசனந்தானென்னையோ? ஒன்றுமில்லையே. சாதியாசாரம் சமயாசாரமென வேறுபகுத் தோதினும் சாதியாசாரமுஞ் சமயாசாரமே என்பதை வாசக நேயர்கள் மனத்திற் கொள்வாராக. இது இவ்வளவில் நிற்க,

தீண்டாமை சமய சாத்திரங்களில் விதிக்கப்பட்டவளவன்றி அது அவ்விதியை விதித்த இறைவனாலும் விலக்க முடியாத உறுதிப்பாடுடைத்தாமென்பதை வலியுறுத்தத் திருநாளைப் போவார் என்னுங் காரணப்பெயர் பூண்ட நந்தனார் சரித்திரமே அமையுஞ் சான்றாகும். நந்தனார் சரித்திரம் புராணங்களுட் சிரேட்டம் பெற்றதாய்ச் சைவத் திருநெறித் திருமுறைகளுளொன்றாய்த் திகழும் திருத்தொண்டர் பெரியபுராணத்துக் கூறப்பட்டுள்ளது. திருத்தொண்டர் பெரிய புராணம் சிவானுபூதிப் பெருஞ் செல்வராகிய சேக்கிழார் சுவாமிகளால் சபா நாயகரே "உலகெலா முணர்ந்தோதற் கரியவன்" என அடியெடுத்துக் கொடுக்கச் சபாநாயகர் சந்நிதியிலேயே யிருந்து பாடப்பட்டது. மேலும் அச்சபாநாயகராலேயே "சோழனே! நான் உலகெலா முணர்ந்தோதற் கரியவன்" என்று அடியெடுத்துக்கொடுக்க, சேக்கிழான் நம்முடைய தொண்டர்களது அடிமைத்திறத்தை விரித்துப் புராணம் பாடி முடித்தான். நீ அதைக் கேள்" என்று அநபாய சோழ மகாராசாவுக்குத் திருவாய்மலர்ந்து அனுக்கிரகிக்கப்பட்டது. இவற்றான் பெரியபுராணம் என்னும் நூலுக்குச் சேக்கிழார் சுவாமிகள் துணைக்காரணகருத்தாவும், சபாநாயகரே நிமித்தகாரணகருத்தாவுமாமென்கை தெள்ளிதிற்றுணியப்படும். ஆகவே திருத்தொண்டர் பெரியபுராணம் சைவசமயிக ளெல்லோராலும் மறுத்தற்கரிய பிரமாணமாகக் கொள்ளற்பாலதொரு நூலாமென்கை பெறப்படுதல் காண்க. அந் நந்தனார் சரித்திரச் சுருக்கம் வருமாறு:

நந்தனார் சோழமண்டலத்திலே கொள்ளிடநதியின் பக்கத்துள்ள மேற்காநாட்டிலே, ஆதனூரிலே, புலையர்குலத்திலே அவதரித்தவர். பூர்வசன்ம புண்ணிய பலத்தால் சிவபத்தியின் மிக்கவராய்ச் சிவாலய கைங்கரியஞ்செய்தலையே தொழிலாகக்கொண்டவர். அப்படிப்பட்ட அவர் திருக்கோயில்களுக்குச் சென்று திருக்கோபுரவாயிற்புறத்து நின்றே சிவபெருமானை வழிபாடுசெய்து வந்தனர். அவர் ஒருநாள் திருப்புன்கூரிலேபோய்ச் சுவாமிதரிசனஞ்செய்து திருப்பணிசெய்ய விரும்பி அங்கேசென்று திருக்கோயில் வாயிலில்நின்று சுவாமியை நேரே தரிசித்துக் கும்பிட வேண்டுமென்று விரும்பியமையால், சுவாமி அவர் விருப்பப்படியே தமக்குமுன்னிருக்கின்ற இடபதேவரை விலகும்படி செய்து அவருக்குக் காட்சிகொடுத்தருளினர். அவ்வாறொருநாளிற் சிதம்பர தரிசனஞ் செய்தல்வேண்டும் என்னுமாசை மனத்திலெழ அவ்வாசை மிகுதியினால் இரவுமுழுவதும் நித்திரைசெய்யாது விடிந்தபின் "நான் சிதம்பரதலத்திற்குப்போனால் திருக்கோயிலினுள்ளே பிரவேசிக்கும் யோக்கியதை என்சாதிக்கு இல்லையே" என்று துக்கித்து "இதுவும் சுவாமியுடைய அருள்தான்" என்று சொல்லிப் போகாதொழிந்தார். பின்னும் ஆசைவளர்தலால் "நாளைக்குப் போவேன்" என்றார். இப்படியே "நாளைக்குப்போவேன், நாளைக்குப்போவேன்" என்று அநேகநாட்கழித்தார். அது காரணத்தால் அவருக்குத் திருநாளைப் போவார் என்னும் காரணப்பெயர் உளதாயிற்று.

(தொடரும்)

## கெட்டவர் சகவாசம்

நவிண்டில், சி. சபாநாயகன்

இப்பூவுலகின்கண் நாம் பலவிதமான தீவினைகளையும் பலவாற்றானும் அடையக்கூடும். நமக்குள் நல்லவன் கெட்டவன் என ஒவ்வொருவனுடைய செய்கையினாலே பாகுபட்டிருத்தல் கண்கூடு. இப்பாகுபாட்டில் கெட்டவனுடைய சகவாசத்தை நாம் கூடியவரை ஒழித்தல் ஓர் பெரும்பேறும். கெட்டவன் என்பது மனுஷனுடைய குணங்களைக் கெடுக்கும் தன்மையை உள்ளவன். இவன், பஞ்சமாபாதகங்களுள் ஒன்றைத்தான் செய்யினும் அதிலிருந்தே மற்ற நான்கு பாதகங்களையுஞ் செய்யத் தலைப்பட்டுக் கெட்டவன் ஆகிறான். "பன்றியொடுகூடிய கன்றும் பவ்வியருந்தும்" என்றபடி ஒரு கெட்டவனுடன் நல்லவன் கூடினால் அவனும் கெட்டவனாகின்றான். எப்படியெனில் கெட்டவன் தன் சுயபுத்தியற்று தான்செய்யும் துர்க்கிருத்தியங்களே நல்லவையென எண்ணி அப்பழக்க வழக்கங்களை தன்னுடன் சேர்ந்தவனுக்கும் பழக்குகிறான். இவனின் ஏவுதல்பற்றியும் சிநேக முறையையுங்கருதி அப்பழக்கங்களை நாடுகிறது நல்லவனின் மனம். இப்படியே அவனும் துர்க்கிருத்தியங்களைச்செய்யத் தலைப்படுகிறான். நானும் இப்படியே ஒருநாள் தற்செயலாக ஒருவனுடன் சந்தித்துக் கூடிக்கொண்டு ஒரு மார்க்கமாகச் சென்றேன். இவனை நானறிந்தும் குடிகாரன் என்பதைமட்டு மறியாதது என்தவறு. வழியில் என்னை நிற்கும்படி சொல்லிவிட்டு பக்கத்திலிருந்த ஒரு குடிசையில் புகுந்தான். அந்தக் குடிசையிலிருந்து வந்த கெட்ட நாற்றத்திலிருந்தும் அங்கே தொங்கவிடப்பட்டிருந்த குடி பாத்திரம் அதாவது "பனை ஓலைப்பிளா"விலிருந்தும் நான் அதைச் சுராலயமென விளங்கினேன். அதனுள் சென்றவன் நிரம்பக் குடித்துவிட்டு வெளியில்வந்து தன்சுயபுத்தியை மறந்து என்னையுமருந்தும்படி கேட்டான். நான் பிரமித்து பதிலளியாது சென்றேன். இதற்குள் வேறொருவன் அக்கேள்வியை மறுதாமுங்கேளாது தகுந்த சிட்சை குடிகாரனுக்குச் செய்தனுப்பினான். இது உண்மையான சம்பவமேயல்லாது பத்திரிகையை நிரப்ப எழுதிய கட்டுக்கதையல்ல.

நீதிசாரத்திலுள்ளபடி நாம் கெட்டவனைக்கண்டால் எப்பொழுதும் கூடியவரை அவன் கண்ணெதிர்ப்படாது விலகி நடத்தல் உத்தமம். அவனுடன்பழகினால் நாம் தப்புதல் அரிதிலுமரிது. இதையறிந்தே திருவள்ளுவரும் "ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மைகடைமுறை தான்சாந் துயரந்தரும்."

எப்பொழுதும் ஒரு கெட்டவனுடன் அவனை நன்கறியாது சகவாசம்செய்தால் அதனால் பல துயரங்கள் ஏற்படும். கடுக்காய்போல நஞ்சுபொதிந்த அமிழ்தம்போல வார்த்தையளவில்மட்டும் இனிமையாகப் பேசுவார் சிநேகம் கிஞ்சித்தும் கூடாது. மேலும் திருவள்ளுவர் கூடாநட்பில்

"முகத்தினினிய நகாஅவகத்தின்னா
வஞ்சரையஞ்சப்படும்" என்று
வற்புறுத்தியிருக்கிறார்.

கெட்டவர்களை ஒருபோதும் நம்பல்கூடாது. இதை வற்புறுத்துதற்கே சிறியோர்க்கும் பெரியோராயினும் அறிவிலிகட்கும் விளக்கிக் காட்டுதன்பொருட்டு பஞ்சதந்திரக் கதைகளில் ஒன்றாகிய துஷ்டபுத்தி சுபுத்தி யென்னும் இரு சிநேகர்களுடைய கதை நன்கு விளக்குவது வெள்ளிடைமலை. நாம் கெட்டவர்களை நம்பி நடந்தால் அவர்கள் நம்பிக்கைத்துரோகஞ்செய்வது நிச்சயம். "நம்பநட நம்பிநடவாதே" என்கிற வாக்கியத்தின்படி ஒருவனையாவது நம்பிநடத்தல் இக்கலியுகத்தில் சாத்தியமன்று. கெட்டவர்களை எப்பொழுதும் பகைவரைப்போலப்பாவித்து நடத்தல்வேண்டும். சொல்லுக்கு அரிச்சந்திரனும் செல்வத்தில் குபேரனைப்போலவும் வலிமைக்கு வீமனைப்போலவும் இருப்பவர்களையே கெடுக்க ஒருவன் சூழ்ச்சி செய்வான். அரிச்சந்திரனைக்கொண்டு பொய்சொல்லுவிக்க விசுவாமித்திரர் எவ்வளவோ சூழ்ச்சிகளைச் செய்தார். அதுபோலவே எந்த வகையில் கூடுதலாக ஒருவனிருக்கின்றானோ அவனைக் கெடுக்கவும் மேல்நிலையடைய விடாமலும் செய்யப் பலர் கங்கணங்கட்டுவது தற்கால உலகவழக்கமாக வந்துவிட்டது. இதைப் பொறாமையென்றுஞ் சொல்லலாம். பொறாமை மிகவும் கெட்டமையானதால் அந்த மையை ஒருவன் நம்மேல் பிரட்டிக்கொள்ளாதபடி நடத்தல் நல்லது.


### சந்தா விகிதம்

முற்பணமே கட்டவேண்டும்.

இலங்கை, இந்தியாவுக்கு ரூபா 2½

மலாய்நாடுகளுக்கு வெள்ளி 5.

### விளம்பர விகிதம்

முற்பணமே கட்டவேண்டும்.

சிறு விளம்பரங்களுக்கு ரூபா 1¼

கலம் ஒன்றுக்கு ரூபா 3


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், வயாவிளான் திரு. சி. நல்லதம்பி என்பவரால் மேற்படியூர் "கோதைப்பிள்ளைசீமா"விலுள்ள ஆனந்தகுமரன் அச்சுநிலையத்தில் 1938-ம் வருஷம் ஆவணிமீ 23-ந்திகதி செவ்வாய்க்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.